## 9.5 கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆய்வு மற்றும் கண்காணிப்பு–1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 199(1)ன் கீழ் அலுவலர்கள் நியமனம்

---

ஊரக வளர்ச்சி (சி3) துறை

அரசாணை (நிலை) எண். 264 நாள் : 21.12.1999

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண். 44650/98/பிசிஏ, நாள் 4.12.98.

**ஆணை**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையானது 1999–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23–ம் நாளைய தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீடாக வெளியிடப்படுதல் வேண்டும்.

2) அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் (சென்னை நீங்களாக) இவ்வறிக்கையின் நகலினை அந்தந்த மாவட்டத்திலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு அனுப்பிவைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## 9. INSPECTOR OF PANCHAYATS

**இணைப்பு**

**அறிவிக்கை**

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 199 உட்பிரிவு (1) மற்றும் பிரிவு 242 (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு 21 வது சட்டம்) ஆகியவற்றின்படி தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் இரண்டாவது பாகத்தில் குறிப்பிடப்படும் அலுவலர்களை அவற்றிக்கெதிராக முதல் பாகத்தில் கூறப்படும் அந்தந்த எல்லைக்குட்பட்ட ஊராட்சிகளை ஆய்வு மற்றும் கண்காணிப்பு செய்யும் அலுவலர்களாக தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நியமிக்கிறார்.

**அட்டவணை**

| ஊராட்சியின் அமைப்பு (1) | ஆய்வு / கண்காணிப்பு அலுவலர் (2) |
|---|---|
| (1) கிராம ஊராட்சி | (அ) விரிவாக்க அலுவலர் (ஊராட்சி)<br>(ஆ) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)<br>(இ) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)<br>(ஈ) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சி)<br>(உ) மாவட்ட ஆட்சியர்<br>(ஊ) ஊராட்சிகள் ஆய்வாளரால் நியமிக்கப்படும் விரிவாக்க அலுவலர் நிலைக்கு குறையாத ஓர் அலுவலர்.<br>(எ) ஊராட்சிகள் ஆய்வாளர். |
| (2) ஊராட்சி ஒன்றியம் | (அ) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சி)<br>(ஆ) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை)<br>(இ) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)<br>(ஈ) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்தணவு)<br>(உ) மாவட்ட ஆட்சியர்<br>(ஊ) ஊராட்சிகளின் ஆய்வாளரால் நியமிக்கப்படும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலைக்கு குறையாத ஓர் அலுவலர்<br>(எ) ஊராட்சிகள் ஆய்வாளர் |
| (3) மாவட்ட ஊராட்சி | (அ) ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்<br>(ஆ) ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர்<br>(இ) மாவட்ட ஆட்சியர்<br>(ஈ) அரசினால் நியமிக்கப்படும் ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலைக்கு குறையாத ஓர் அலுவலர்<br>(உ) ஊராட்சிகள் ஆய்வாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்